**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |

**சுற்றறிக்கை எண்: 14/2018** 24-09-2018

அன்புடையீர்,

வணக்கம். 11-09-2018 அன்று மாலை துடியலூரில், கோவை வடக்கு உதவி வட்டச் செயலாளர் திரு.மகேந்திரன் அவர்களின் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது. சங்கத் தலைவர், பொதுச்செயலாளர், நிதிச்செயலாளர் மற்றும் ஏராளமான பொறுப்பாளர்கள் வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

❖ இளநிலை உதவியாளர் கல்வித்தகுதியை எஸ்.எஸ்.எல்.சி. என்பதற்கு பதிலாக பட்டப்படிப்பு என மாற்றியதை எதிர்த்து, சங்கத்தால் தொடரப்பட்ட வழக்கு சென்னை உயர் நீதிமன்ற டிவிசனல் பெஞ்சில் நிலுவையாக இருப்பதை தாங்கள் அறிவீர்கள். மின் வாரியம் 3 ஆகப் பிரிப்பதால் தொழிலாளர்களின் பணிநிலையில் பாதிப்பு இருக்காது என முத்தரப்பு நகல் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள உறுதி மொழி மீறப்பட்டுள்ளதால் கல்வித்தகுதி மாற்ற உத்தரவு இரத்து செய்யப்பட வேண்டும் என்பது நமது வாதமாகும். ஆனால் முத்தரப்பு ஒப்பந்தம் இன்னமும் கையெழுத்து ஆகவில்லை என்று சொல்லி வாரியம் எதிர் வாதம் செய்கிறது. இந்நிலையில் நாங்குநேரியில் தனியார் மின் விநியோகம் செய்ய டி.என்.இ.ஆர்.சி கொடுத்த உத்தரவினை எதிர்த்து வழக்கு தொடர்வதற்கான வாய்ப்புகளை 06-09-2018 அன்று மின்சாரத் தொழிற்சங்கங்கள் ஆலோசனை மேற்கொண்ட போது, ஏற்கனவே மின் வாரிய பிரிப்பு சம்பந்தமாக வெளியிடப்பட்ட அரசாணை 100 நாள் 19-10-2010ன் மீது தொடரப்பட்ட ஓர் வழக்கில் 01-11-2010 அன்று நீதிமன்றத்தின் முன் கீழ் காணும் உறுதி மொழி பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிய வந்தோம்.

a) “The terms and conditions of the existing employees of the Board upon transfer to the Corporate entities shall not be inferior/detrimental to the present terms and conditions in the Board”.
c) “The principles and/or terms and conditions of service of the existing employees in matters like promotions, appointments, **internal selections**, transfers, leave, all allowances etc., regulated by existing regulations/service rules are guaranteed to continue to be the same during transition and upon permanent transfer to the respective successor entity of the Board, unless and until a new set of rules, regulations, certified standing orders is/or introduced by the successor entity come into force in accordance with law”.

➢ மேற்கண்ட பதிவினை நமது வழக்கின்போது நிர்வாகம் நீதிமன்றத்தில் மறைத்து விட்டது மிகப்பெரும் தவறு என்பதை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து இந்தப் பதிவின்படி கல்வித்தகுதியை நிர்வாகம் மாற்றி இருக்கக்கூடாது என்று நீதிமன்றத்தில் 20-09-2018ல் கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளோம். தற்போது நிலுவையில் உள்ள நமது வழக்கில், ஏற்கனவே நீதிமன்றம் 200 இ.நி.உ.பொறுப்புகளை காலியாக வைத்திடவேண்டும் என்ற உத்தரவு இருப்பதால், அதன்படி எஸ்.எஸ்.எல்.சி மட்டும் படித்து உள்ளவர்களை உள்முகத்தேர்வு செய்திட இடைக்கால உத்தரவு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளோம்.
➢ ஊதிய உயர்வு, வேலைப் பளு ஒப்பந்தத்தின்படி 2000 L.I பொறுப்புகளுக்கு நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டி உள்ளது. ஆனால், இதற்கான கோப்பு வாரியத்தலைவரின் ஒப்புதலுக்கு சென்ற போது, ஏற்கனவே 700 L.I பொறுப்புக்கள்

காலியாக இருப்பதாகவும், அதனை நிரப்புவதற்கு W.M பொறுப்பில் ஆட்கள் இல்லை என்ற நிலையில் மேலும் 2000 பொறுப்புக்களை அனுமதித்து, யாரைக் கொண்டு அதனை நிரப்பப்போகிறீர்கள்? என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கான பதில் சமர்ப்பிக்கப்படுகிறது.

- ஒப்பந்தப்படி வழங்கப்படவேண்டிய 383 Spl.Gr.FM பொறுப்புகளுக்கு தேவைப்படும் விவரங்கள் அனைத்து வட்டங்களிலிருந்து பெறப்பட்டுவிட்டதாகவும் விரைவில் அனுமதி வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.
- புதியதாக துவங்கப்பட்ட துணை மின் நிலையங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள துணை மின் நிலையங்களில் காலியாக இருக்கும் உதவி பொறியாளர்கள் மற்றும் இதர பொறுப்புகளை நிரப்புவதற்கான கோப்பு, உயர் அலுவலர்கள் சுற்றுக்கு விடப்பட்டிருப்பதாகவும் விரைவில் அனுமதி வழங்கப்படும் என கூறப்படுகிறது.
- கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை மற்றும் முதல்நிலை பொறுப்புக்களை ஒன்றாக்கும் போது ஆண்டுயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை சங்கங்கள் வைக்கவில்லை என்று, வாரிய உத்திரவில் கூறப்பட்டதை சங்கங்கள் மறுத்து விட்டன. நியாயப்படியும், தர்மப்படியும் பதவி உயர்வாகக் கருதப்படும் சுமார் 3000 பேர்களுக்கு ஆண்டுயர்வு வழங்கியே தீரவேண்டும் என்று வற்புறுத்தியதின் விளைவாக பிரச்சனை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கூடிய விரைவில் ஆண்டுயர்வினை உறுதியாகப் பெறுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
- அட்டைப் பட்டியல் பணியாளர்களின் பதவி உயர்வு தேக்க நிலையை போக்கி அவர்களின் நீண்ட நாளைய ஏக்கத்திற்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் ஒப்பந்தத்தில் 43 Sr.ATO பொறுப்புகளும் 156 உபகோட்ட ATO பொறுப்புக்களும் சங்கங்கள் பெற்றுத் தந்தன. ஆனால், இப்பொறுப்புக்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால், இந்தக் கூடுதல் பொறுப்புகள் வாங்கியதின் பலனை அனுபவிக்க முடியாமல், மாதாமாதம் பணியாளர்கள் ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு நிவாரணம் காண சங்கங்கள் எடுத்த தொடர் முயற்சியின் காரணமாக இன்று 24.09.2018 Sr.ATO க்கான DPC தேதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களில், தகுதிகாண் அறிக்கை பெறப்பட்டவர்களை வைத்து, ATO பதவிக்கும் DPC நடத்திட வேண்டும் என்று நிர்வாகத்தினை வற்புறுத்தி வருகின்றோம்.
- கணக்கீட்டாளர்களிலிருந்து சுமார் 2000 நபர்களுக்குண்டான தகுதிகாண் அறிக்கை ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலிருந்து பெறப்பட்டு கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வு வழங்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.
- கணக்கு உதவியாளர், கணக்கு மேற்பார்வையாளர், உதவி கணக்கு அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்குண்டான விவரங்களை, அனைத்து வட்டங்களிலிருந்து பெற்று, பதவி உயர்வு வழங்கிட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.
- சமீபத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட 3 ஆண்டு காலமாறுதலில், ஒரு சில குறைபாடுகள், தவறுகள் நடைபெற்றதை நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று அவைகளை சரி செய்துள்ளோம். இராமநாதபுரம் வருவாய் பிரிவில் சில மாதங்களுக்கு முன்பு புதிதாக பணியில் சேர்ந்த ICWA படித்த உதவி கணக்கு அலுவலர் திரு.சரவணன் அவர்களை வழுதூர் Gas Turban க்கு மாற்றம் செய்யப்பட்டதை, வட்டச் செயலாளர் திரு. ஜெகதீச பாண்டியன் அவர்கள் சங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார். அதன் மீது சங்கம் நடவடிக்கை எடுத்து அந்த மாறுதல் உத்திரவை இரத்து செய்தது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.
- 11.09.2018 அன்று பொதுச் செயலாளரால் அனுப்பப்பட்டிருந்த பொதுக்குழு அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தபடி நேற்று 23.09.2018 நமது சங்கத்தின் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நடைபெற்றது. மாலை 5.00 மணியளவில் தேர்தலில் போட்டியிடுவோரின் பெயர் மற்றும் பொறுப்புகளுக்கான அட்டவணை தேர்தல் அலுவலரால் வெளியிடப்பட்டது.

…3…

தலைவர்

1) S.நாகராஜன்
2) நா. பெரியசாமி

துணைத் தலைவர்

1) ப. அன்பழகன்
2) S. அபுத்தாயர்
3) ம. சென்னான்
4) A. ஆறுக்குட்டி

பொதுச் செயலாளர்

1) இர. சந்திரசேகரன்
2) க. சந்திரசேகரன்

இணைச் செயலாளர்

1) S. மகாலிங்கம்
2) N. கணேசன்
3) R. பாண்டியன்

அமைப்புச் செயலாளர் (போட்டி இல்லை)

1) மா. கோபாலகிருஷ்ணன்

நிதிச் செயலாளர்

1) B. தியாகராஜன்
2) T. தயாளன்

மாநிலமகளிர் அணி செயலாளர்

1) C. சுகந்தி
2) E. வரலட்சுமி

- வேட்பு மனுத்தாக்கலின் போது எவ்வித அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கையாக போலீஸ் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருந்தோம். காலைமுதல் மாலைவரை நிகழ்ச்சிகள் அனைத்தும் வீடியோ கேமராவில் பதிவு செய்யப்பட்டது. வேட்பு மனுத்தாக்கல் செய்யும் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டிருந்தது. ஷாமினா மற்றும் நாற்காலிகள் போடப்பட்டன. சுமார் 100 பொறுப்பாளர்கள் மாநிலமுழுவதிலிருந்தும் வந்திருந்தார்கள். அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு, நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு தந்தார்கள். தேர்தல் அலுவலர்களின் சிறப்பான பணிகளை, அனைவரும் மனம் விட்டுப் பாராட்டினார்கள்.
- 11.09.2018 அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்த கால அட்டவணை அப்படியே பின்பற்றப்பட்டது. அழைப்பிதழில் வரையறுக்கப்பட்டபடி தேர்தல் அலுவலகத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே வந்திருந்தார்கள். ஒருவருக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வழங்கப்பட்டது. வேட்பு மனு மற்றும் திரும்பப் பெறும் கடிதத்தினை வேட்பாளர்கள் நேரில் கொடுத்தார்கள். வேட்பு மனுவுடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்தார்கள். வேட்பு மனு பரிசீலனையின்போது

…4…

அப்பொறுப்பிற்கு விண்ணப்பம் செய்தவர்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். கௌரவ உறுப்பினர்கள் யாரும் இல்லை என்ற சங்கத்தின் நிலைப்பாடு உறுதிப் படுத்தப்பட்டது.

- இதற்கிடையில் 11.09.2018 தேதியிட்ட, சங்கத்தின் தேர்தல் சம்மந்தமான அறிவிப்புகளுக்கு, தலைவர் தெரிவித்த ஆட்சேபணைக் கடிதம் 17.09.2018 அன்று மதியம்தான் கிடைத்தது. தலைவரின் ஆட்சேபனைகளுக்கு, பொதுச் செயலாளர் மறுநாளே அதாவது 18.09.2018 அன்று விளக்கமளித்தார். ஆனால், அதற்குள் 17.09.2018ல் ஈரோடு மண்டலச் செயலாளர் திரு. கோபால கிருஷ்ணன், மதுரை மண்டலச் செயலாளர் திரு.அபுத்தாயர் மற்றும் கோவை வடக்கு வட்டச் செயலாளர் திரு.எஸ். நாகராஜன் ஆகியோர் தலைவரின் கடிதத்தில் தெரிவித்த ஆட்சேபனைகள் அனைத்திற்கும் உடன்படுவதாகவும் பொதுச் செயலாளரின் அறிக்கை, தொழிற்சங்க மற்றும் தேர்தல் ஜனநாயகத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் என்றும் பொதுச்செயலாளர் தனது அறிவிப்புக்களை திரும்பப் பெற்றுக்கொண்டு தேர்தல் அலுவலர், தேர்தல் நடைமுறைகளை அறிவித்திட வழிவகுத்திடுமாறு தனித்தனியாக கடிதம் எழுதுகிறார்கள். நெல்லை மண்டலச் செயலாளர் திரு.ஐயம்பெருமாள் அவர்களும் பொதுச் செயலாளர் ஜனநாயகத்திற்கு புறம்பாக நடந்து விட்டதாக 18-09-2018 அன்று ஈமெயில் அனுப்புகிறார்.

- பொதுச் செயலாளர் தான் எந்த தவறும் செய்யவில்லை என்ற சமாதானத்தை தலைவருக்கு தெரிவிப்பதற்கு முன்பே, இவர்கள் மூவரும் பொதுச் செயலாளர் மீது இவ்வாறு தாக்குதல் தொடுப்பது நியாயமா? என்பதனை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

- கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து இதுபோன்ற இம்சைகளை அனுபவித்துக் கொண்டுதான் பொதுச் செயலாளர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதனை மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கூடிய விரைவில் இத்தகைய இம்சைகளுக்கு முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம்.

தோழமையுள்ள

[signature]

பொதுச்செயலாளர்

பெறுநர்: பொதுக்குழு உறுப்பினர்கள், மத்திய அலுவலகக் கிளைச் செயலாளர்கள்,உதவிக் கோட்டச் செயலாளர்கள்,
கோட்டச் செயலாளர்கள்,வட்டப் பொருளாளர்கள்,
உதவி வட்டச் செயலாளர்கள்,வட்ட மகளிர் அணிச் செயலாளர்கள்,
வட்டத் தலைவர்கள்,வட்டச் செயலாளர்கள்,
உதவி மண்டலச் செயலாளர்கள்,

நகல் : செய்தி மடல்.